# <u>திருமங்கலம் நகராட்சி</u>

## <u>மன்றகூட்டப்பொருள்</u>

**நகர்மன்றத் தலைவர் திருமதி.எம்.ரம்யா அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்**

**1)** 5 ஆண்டுகளுக்கு பிறகு தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022 நடத்தி நகர்மன்றத் தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களை தேர்வு செய்து பொதுமக்கள் சேவை செய்வதற்கு வாய்ப்பளித்த **மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு இந்நகர்மன்றம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் எண்.1** **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு ஏகமனதாக நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**நகர்மன்றத் தலைவர் திருமதி.எம்.ரம்யா அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்**

**2)** தமிழக முதல்வராக 5 முறையாக பணியாற்றி பொதுமக்கள் மனதில் நீங்கா இடம்பெற்று நல்லமுறையில் சேவை செய்த மறைந்த முன்னாள் **முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர்.கலைஞர்.மு.கருணாநிதி** அவர்களின் திருவுருவச் சிலை தமிழக அரசின் அனுமதி பெற்று திருமங்கலம் நகர்ப்பகுதியில் அமைப்பதற்கு கோரிக்கை வைக்க தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.2** **அரசிடம் கோரிக்கை வைக்க தீர்மானிக்கப்பட்டது.**

**3)**தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில்

முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழஙக குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழஙகுவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பஙகு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடஙகு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழஙகப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டஙகளுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடஙகளுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில்

கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடஙகள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடஙகள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடஙகள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடஙகள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடஙகளுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடஙகளுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் திருமங்கலம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 0.57 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 3.00 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 2.53 |

| | | |
|---|---|---|
| 4 | பணியாளர்களுக்கு வழஙகப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழஙக வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பஙகுத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 4.05 |
| | **மொத்தம்** | **10.15** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், 01.04.2022 முதல் புதிதாக வரிநிர்யணம் செய்யப்படும் சொத்துவரி மற்றும் காலிமனை வரி கீழ்க்கண்ட விபரப்படி மண்டல மதிப்பீட்டின் அடிப்படையில் வரி நிர்ணயம் செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**மண்டல மதிப்பீடு (சொத்துவரி) – 01.04.2022 முதல் உயர்வு செய்யப்பட வேண்டிய சொத்துவரி வரிநிர்ணயம் உயர்வு சதவீதம்**

| மண்டலம் | தற்போதைய மதிப்பு (ரூபாய்) | 600 சதுரஅடி மற்றும் 600 சதுரஅடிக்கு குறைவாக உள்ள குடியிருப்பு கட்டிடஙகளுக்கு 25 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | 600 சதுரஅடி முதல் 1200 சதுரஅடி உள்ள குடியிருப்பு கட்டிடஙகளுக்கு 50 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | 1201 சதுரஅடி முதல் 1800 சதுரஅடி உள்ள குடியிருப்பு கட்டிடஙகளுக்கு 75 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | 1800 சதுரஅடிக்கு மேல் உள்ள குடியிருப்பு கட்டிடஙகளுக்கு 100 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | தொழிற் சாலைகள் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கட்டிடஙகளுக்கு 75 சதவீதம் வரி உயர்வு (ரூபாய்) | வணிக பயன்பாடு கட்டிடஙகளுக்கு 100 சதவீதம் வரி உயர்வு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| A | 0.80 | 1.00 | 1.20 | 1.40 | 1.60 | 1.40 | 1.60 |
| B | 0.60 | 0.75 | 0.90 | 1.05 | 1.20 | 1.05 | 1.20 |
| C | 0.40 | 0.50 | 0.60 | 0.70 | 0.80 | 0.70 | 0.80 |

மண்டல மதிப்பீடு (காலியிடவரி)

| மண்டலம் | இரண்டாம் நிலை நகராட்சியில் காலிமனை வரி நிர்ணயம் தொகை (ரூபாய்) | முதல்நிலை நகராட்சியில் காலிமனை வரிநிர்ணயம் தொகை சதுரஅடிக்கு (ரூபாய்) | | தற்போது முதல்நிலை நகராட்சியில் காலிமனை வரி பொது சீராய்வின்படி 01.04.2022 முதல் நிர்ணயம் செய்யப்படும் தொகை சதுரஅடிக்கு (ரூபாய்) | |
|---|---|---|---|---|---|
| | | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| A | 0.10 | 0.15 | 0.30 | 0.30 | 0.60 |
| B | 0.15 | 0.20 | 0.40 | 0.40 | 0.80 |
| C | 0.20 | 0.30 | 0.50 | 0.60 | 1.00 |

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு இணைப்பில் கண்டுள்ள தெருக்களில் மண்டலஙகள் மதிப்பில் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள் 01.04.2022–ன்படி நகராட்சிகள்/மாநகராட்சிகளில் சொத்துவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிமுறைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சுற்றறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளதன்படி திருமங்கலம் நகராட்சியிலும் சொத்துவரி சீராய்வு செய்திட ஏதுவாக மன்றத் தீர்மானத்தினை இயற்றி சொத்துவரி சீராய்விற்கு இசைவு தெரிவிக்கலாம்.

**ந.க.எண்.609/2022/அ1**

**தீர்மானம் எண்.3** **அரசு ஆணையின்படி 1.4.2022 முதல் சொத்துவரி உயர்வு செய்யவும், 1.4.2022 முதல் குறைந்தபட்ச காலிமனை வரி உயர்வு செய்ய அனுமதிக்கப்பட்டது.**

**4)** திருமங்கலம் நகராட்சி பகுதியில் 15வது நிதிக்குழு சுகாதாரத்துறை குறிப்பிட்ட மானியம் தேசிய சுகாதாரப்பணி 2021–22 ன் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வார்டு எண்.2 முகமதுஷாபுரம் தெரு–4 ல் அமைந்துள்ள பூஙகா பயன்பாட்டிற்கான இடத்தில் நகர்ப்புற சுகாதார ஆரோக்ய மையம் கட்டுவதற்கு 18.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் 18.03.2022 –ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. திரு. ஆர்.பாலமுருகன்,<br>ஒப்பந்ததாரர்,<br>பெரியரகவீதி,<br>திருப்பரஙகுன்றம். | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.09 சதவீதம் குறைவு |
| 2. திரு. கே.ஆதிமூலம்,<br>ஒப்பந்ததாரர்,<br>விருதுநகர் ரோடு,<br>திருமஙகலம். | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.44சதவீதம் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள திரு. ஆர்.பாலமுருகன்,ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண். 2187/2021/இ1

**தீர்மானம் எண்.4** **அனுமதிக்கப்பட்டது.**

5) திருமஙகலம் நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2020–21 (Untied Grant) ன் கீழ் ரூ.9.30 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வார்டு எண்.16 சோழவந்தான்ரோடு சந்தைப்பேட்டையில் உள்ள கீழ்நிலைநீர்த்தேக்க தொட்டிக்கு 62.5 KVA ஜெனரேட்டர் விநியோகம் செய்து பொருத்துதல் மற்றும் கூரை அமைத்தல் பணிக்கு 22.03.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் 22.03.2022 –ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. திரு. கே.ஆதிமூலம்,<br>ஒப்பந்ததாரர்,<br>விருதுநகர்ரோடு,<br>திருமஙகலம் | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.07 சதவீதம் குறைவு |
| 2.திருமதி. ஜி.மேகலா,<br>ஒப்பந்ததாரர்,<br>மதுரை, | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.13சதவீதம் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள திரு. கே.ஆதிமூலம், ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 75/2021/இ1**

**தீர்மானம் எண்.5** **அனுமதிக்கப்பட்டது.**

6) திருமங்கலம் நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2020–21 (Untied Grant) ன் கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வார்டு எண்.10,12,13 முன்சீப்கோர்ட்ரோடு, வார்டு எண்.8 ஆறுமுகம் வடக்கு தெரு–2, ஆறுமுகும் நடுத்தெரு–12, வார்டு எண்.12 இராஜாஜி 1வது தெரு, வார்டு எண்.22 சின்னக்கடைவீதி, வார்டு எண்.26 தெற்குதெரு பகுதிகளில் உள்ள சாலைகளில் குடிநீர் குழாய் பதித்தல் பணியில் சேதாரமுற்ற சாலைகளை சீரமைத்தல் பணிக்கு 22.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் 22.03.2022 –ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. திரு. கே.ஆதிமூலம்,<br>ஒப்பந்ததாரர்,<br>விருதுநகர்ரோடு,<br>திருமங்கலம் | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.04 சதவீதம் குறைவு |
| 2. திருமதி. ஜி.மேகலா,<br>ஒப்பந்ததாரர்,<br>மதுரை, | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.08சதவீதம் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழுங்கியுள்ள திரு. கே.ஆதிமூலம், ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 75/2021/இ1**

**தீர்மானம் எண்.6 அனுமதிக்கப்பட்டது.**

7) திருமங்கலம் நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2020–21 (Untied Grant) ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வார்டு எண்.14 செங்குளம் கிழக்கு 3வது தெருவில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு 22.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் 22.03.2022 –ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. திரு. எஸ்.ஆதிகணேஷ்,<br>ஒப்பந்ததாரர்,<br>திருமங்கலம் | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.06 சதவீதம் குறைவு |
| 2. திருமதி. ஜி.மேகலா,<br>ஒப்பந்ததாரர்,<br>மதுரை, | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.21சதவீதம் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள திரு. எஸ்.ஆதிகணேஷ், ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 75/2021/இ1**

**தீர்மானம் எண்.7 அனுமதிக்கப்பட்டது.**

8) திருமங்கலம் நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2020–21 (Untied Grant) ன் கீழ் ரூ.60,000 மதிப்பீட்டில் நகராட்சி வார்டு எண்.8 ஆறுமுகம் மெயின்ரோட்டில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு 22.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் 22.03.2022 –ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. திருமதி. ஜி.மேகலா<br>ஒப்பந்ததாரர்,<br>மதுரை, | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.17 சதவீதம் குறைவு |
| 2. திரு.சி.ஜெயச்சந்திரன்,<br>ஒப்பந்ததாரர்,<br>திருமங்கலம், | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.22சதவீதம் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி. ஜி.மேகலா ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 75/2021/இ1**

**தீர்மானம் எண்.8 அனுமதிக்கப்பட்டது.**

**9)** திருமங்கலம் நகராட்சி பகுதியில் **15**வது மத்திய நிதிக்குழு மானிய நிதி **2020–21** (Untied Grant) ன் கீழ் ரூ.**5.20** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வார்டு எண்.**5** ஜவஹர்நகர் **12**வது தெரு குடிநீர் குழாய் பணியின் போது சேதாரமுற்ற சிமெண்ட் சாலையை சீரமைக்கும் பணிக்கு **22.03.2022** ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் **22.03.2022** –ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| **1.** திரு.எஸ்.ஆதிகணேஷ்<br>ஒப்பந்ததாரர்,<br>திருமங்கலம், | மதிப்பீட்டினைக்காட்டிலும் **0.07** சதவீதம் குறைவு |
| **2.** திருமதி.ஜி.மேகலா,<br>ஒப்பந்ததாரர்,<br>மதுரை, | மதிப்பீட்டினைக்காட்டிலும் **0.34**சதவீதம் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள திரு.எஸ்.ஆதிகணேஷ் ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 75/2021/இ1**

**தீர்மானம் எண்.9** **அனுமதிக்கப்பட்டது.**

10)திருமங்கலம் நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2020–21 (Untied Grant) ன் கீழ் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வார்டு எண்.26 சமுதாய கழிப்பறை எதிர்புறம் தெற்குதெரு கிழக்கு குறுக்கு தெரு பேவர்பிளாக் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு 22.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் 22.03.2022 –ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

1. திரு.எஸ்.ஆதிகணேஷ்
   ஒப்பந்ததாரர்,
   திருமங்கலம், — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.07 சதவீதம் குறைவு

2. திருமதி.ஜி.மேகலா,
   ஒப்பந்ததாரர்,
   மதுரை, — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.29 சதவீதம் கூடுதல்

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.ஆதிகணேஷ் ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 75/2021/இ1**

**தீர்மானம் எண்.10 அனுமதிக்கப்பட்டது.**

**11)**திருமஙகலம் நகராட்சி பகுதியில் **15**வது மத்திய நிதிக்குழு மானிய நிதி **2020–21** (Untied Grant) ன் கீழ் ரூ.**7.30** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வார்டு எண்.**10** நகராட்சி அலுவலக முன்சீப் கோர்ட் ரோடு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பேவர்பிளாக் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு **22.03.2022** ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் **22.03.2022** –ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. திரு.கே.ஆதிமூலம்,<br>ஒப்பந்ததாரர்,<br>திருமஙகலம், | மதிப்பீட்டினைக்காட்டிலும் **0.06** சதவீதம் குறைவு |
| 2. திருமதி.ஜி.மேகலா,<br>ஒப்பந்ததாரர்,<br>மதுரை, | மதிப்பீட்டினைக்காட்டிலும் **0.10** சதவீதம் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள திரு.கே.ஆதிமூலம், ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 75/2021/இ1**

**தீர்மானம் எண்.11** **அனுமதிக்கப்பட்டது.**

12)திருமங்கலம் நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2020–21 (Untied Grant) ன் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வார்டு எண்.10,16 மற்றும் 26 விருதுநகர்ரோடு, உசிலைரோடு, தெற்குதெரு நுண்உயிரி செயலாக்க கூடங்கள் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் கழிவுநீர்க் குழாய் அமைத்தல், UG கேபிள் மாற்றி அமைத்தல் மற்றும் மின்சார வசதி செய்தல் பணிக்கு 22.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் 22.03.2022 –ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. திருமதி.ஜி.மேகலா,<br>ஒப்பந்ததாரர்,<br>மதுரை, | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.09 சதவீதம் குறைவு |
| 2. திரு.சி.ஜெயச்சந்திரன்,<br>ஒப்பந்ததாரர்,<br>திருமங்கலம், | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.19 சதவீதம் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.ஜி.மேகலா, ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 75/2021/இ1**

**தீர்மானம் எண்.12 அனுமதிக்கப்பட்டது.**

13)திருமங்கலம் நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2020–21 (Untied Grant) ன் கீழ் ரூ.5.60 இலட்சம் மதிப்பீட்டில் தெற்குதெரு கழிவு நீரேற்று நிலைய மோட்டார் மற்றும் பம்ப் விநியோகம் செய்து மாற்றி அமைத்தல் மற்றும் சந்தைப்பேட்டை கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு மோட்டார், வால்வு மற்றும் கேபிள் விநியோகம் செய்து பொருத்தும் பணிக்கு 22.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் 22.03.2022 –ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

1. திரு. எஸ்.ஆதிகணேஷ், ஒப்பந்ததாரர், மதுரை, — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.01சதவீதம் குறைவு

2. திருமதி.ஜி.மேகலா, ஒப்பந்ததாரர், மதுரை, — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.10 சதவீதம் கூடுதல்

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள திரு.எஸ்.ஆதிகணேஷ், ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 75/2021/இ1**

**தீர்மானம் எண்.13 அனுமதிக்கப்பட்டது.**

**14)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட **27** வார்டுகளில் கீழ்க்காணும் விபரப்படி தெரு விளக்குகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1. | 1 x 28W Tube Light | - | 1659 Nos |
| 2. | 4 x 24W CFL | - | 204 Nos |
| 3. | 250 W SV | - | 19 Nos |
| 4. | 180 W LED (Mini mast 3 Nos) | - | 15 Nos |
| 5. | 400W Metal Halide (Highmast 7 Nos) | - | 70 Nos |
| 6. | 25W LED Lamps | - | 109 Nos |
| | Total | - | 2076 Nos |

மேற்காணும் தெரு விளக்குகளை தனியார் மூலம் பராமரிப்பு செய்து வரும் பணிக்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாகம் ஆணையரகம், சென்னை அவர்களின் ந.க. எண். **29045/2019/**டிஓ**2**, நாள். **24.01.2020**—ம் தேதிய கடிதத்தில் ஒரு வருட காலத்திற்கு பணி மேற்கொள்ள நிபந்தனைகளுடன் கூடிய அனுமதி அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து தமிழ்நாடு திறந்த நிலை ஒப்பந்தப்புள்ளிகள் சட்ட விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு சடையாண்டி ஏஜென்ஸிஸ், ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம் நிறுவனம் மூலம் பணி நடைபெற்று ஓராண்டு முடிவுற்றதால் இரண்டாம் ஆண்டிற்கு இதே நிறுவனம் மூலம் பணி மேற்கொள்வதற்கு காலநீட்டிப்பு செய்து **(07.04.2021** முதல் **06.04.2022** வரை**)** தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். **29045/2019/**டிஓ**2**, நாள். **01.06.2021** ல் அனுமதிக்கப்பட்டது.

மேலும் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களின் மேற்காணும் **01.06.2021** ம் தேதிய காலநீட்டிப்பு அனுமதி கடிதத்தின் நிபந்தனைகளில் ESCO நிறுவனம் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டின் நடப்பில் உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை ரத்து செய்து கொள்ளவும் மற்றும் ஒப்பந்ததாரர் கோரிக்கையின் அடிப்படையில் மன்றத்தின் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உரிய அனுமதி பெற்று மூன்றாம் ஆண்டிற்கு காலநீட்டிப்பு செய்து கொள்வதற்கு நிபந்தனையாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்காணும் தனியார் நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 06.04.2022 அன்று முடிவடைய உள்ளது.

இந்நிலையில் தற்போது இந்நகராட்சியின் தெரு விளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் சடையாண்டி ஏஜென்ஸிஸ், ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம் தனது 24.01.2022 ம் தேதிய கடிதத்தில் இரண்டு ஆண்டுகள் பணி நிறைவுற உள்ளதால் மேலும் ஓராண்டு காலத்திற்கு (07.04.2022 முதல் 06.04.2023 வரை) தனது ஒப்பந்தத்தை (மூன்றாம் ஆண்டிற்கு) காலநீட்டிப்பு செய்து தர கோரிரியுள்ளது. இந்நிறுவனம் மூலம் மேலும் ஓராண்டு (அல்லது) ESCO நிறுவனத்திற்கு ஒப்படைப்பு செய்திடும் வரை பணி மேற்கொள்வதற்கும் அதற்கான உத்தேச தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ.29.71 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.இந்நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளும் வகையில் மேலும் ஓராண்டு காலத்திற்கு (மூன்றாவது ஆண்டு) காலநீட்டிப்பு செய்திட உரிய பிரேரணையை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கான செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், வரவு செலவு திட்டத்தில் உரிய ஒதுக்கீடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 2160/2019/இ1**

**தீர்மானம் எண்.14** **அனுமதிக்கப்பட்டது.**

15) நமக்கு நாமே திட்டம் 2021–22 ன் கீழ் ரூ.2.60 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு எண்ணிக்கை பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.27519–17/2021/பி2 நாள். 02.03.2022 ல் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழஙகப்பட்டதனை தொடர்ந்து 24.03.2022 ம் தேதி இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 24.03.2022 –ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

| பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பு நோக்கு பட்டியல் விபரம் |
|---|---|---|
| தெற்கு தெரு நகராட்சி ஆரம்பப்பள்ளி வளாகத்தில் கற்றல் மையத்திற்கு தேவையான புத்தகஙகள் மற்றும் தளவாடபொருட்கள் விநியோகம் செய்தல் (மதிப்பீடு.ரூ.90,000/–) | திரு.கே.ஆதிமூலம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டினை காட்டிலும் 0.04 சதவிகிதம் குறைவு |
| | திரு.ஆர்.பாலமுருகன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டினை காட்டிலும் 0.12 சதவிகிதம் கூடுதல் |
| ஜவஹர் நகர் 8வது தெரு கதவு எண். 51/20 அழகுபவனத்தில் இயஙகி வரும் பொது நூலகத்தில் கற்றல் மையத்திற்கு தேவையான கணினி, புத்தகஙகள் மற்றும் தளவாட பொருட்கள் விநியோகம் செய்தல் (மதிப்பீடு.ரூ.1,70,000/–) | திரு.கே.ஆதிமூலம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டினை காட்டிலும் 0.04 சதவிகிதம் குறைவு |
| | திரு.ஆர்.பாலமுருகன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டினை காட்டிலும் 0.20 சதவிகிதம் கூடுதல் |

மேற்காணும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள திரு. கே.ஆதிமூலம், ஒப்பந்ததாரர் மூலம் மேற்காணும் இரண்டு பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 1642 /2021/இ1**

**தீர்மானம் எண்.15 அனுமதிக்கப்பட்டது.**

16) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.1725/2022/எம்3, நாள். 24.02.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.1723/2022/பி1, நாள்.01.04.2022ம் தேதிய கடிதத்தில் முதல்நிலை நகராட்சிகளுக்கு மூன்று எண்ணிக்கை ஈப்பு வாகனங்கள் வாங்கிக் கொள்ள நிபந்தனைகளுடன் கருத்துரு சமர்பித்து உரிய அனுமதி பெற்று வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் தற்போது இயக்கத்தில் இருந்து வரும் பொலிரோ ஈப்பு வாகனம் வாங்கப்பட்டு 13 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் புதிதாக மூன்று எண்ணிக்கை ஈப்பு வாகனங்கள் வாங்க வேண்டியது அவசியமாகிறது.

எனவே இந்நகராட்சிக்கு புதிதாக மூன்று எண்ணிக்கை ஈப்பு வாகனங்கள் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட விலைக்கு மிகாமல் விதிகளுக்கு உட்பட்டு கொள்முதல் செய்வதற்கும் இவ்வாகனங்கள் இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் (TEXCO ON CONTRACT) உரிய ஒப்பந்த விதிமுறைகளை பின்பற்றி ஒட்டுநரை நியமித்து கொள்வதற்கும் இதற்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் சமர்பித்து நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 611 /2021/இ1**

**தீர்மானம் எண்.16 அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்)மு.ரம்யா,**
**நகர்மன்றத்தலைவர்**
**திருமங்கலம் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**திருமங்கலம் நகராட்சி.**